பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 17 திங்கட்கிழமை 02.09.2024 கதிர் 299

## 2024 ஜனாதிபதித் தேர்தலில்

# சஜித் பிரேமதாசவுக்கே தமிழ் அரசுக் கட்சி ஆதரவு

## தமிழ் பொது வேட்பாளருக்கு கட்சி ஆதரவில்லை அவர் உடன் விலகவேண்டும் எனவும் தீர்மானம்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. வவுனியாவில் நேற்றுக்கூடிய கட்சியின் மத்திய செயற்குழுவினர் இந்த முடிவை எடுத்து அறிவித்தனர். செப்டெம்பர் 4 தபால் மூல வாக்களிப்புத் தொடங்க இருக்கும் நிலையில் தமிழ் மக்களுக்கு வழிகாட்டுதலை வழங்கும் வகையில் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முற்பகல் முதல் மாலை வரை பல மணி நேரமாக வவுனியா ☞ 2

## இது ரகசியம் அல்ல!

2024 ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்வது என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி ஒரு வழியாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. வவுனியாவில் கூடிய அதன் மத்திய செயற்குழு சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை எடுத்தது.

தமிழ் பொது வேட்பாளர் தரப்பை முன்னிறுத்திய பொதுக் கட்டமைப்பினருக்கும் அதில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் கடந்த சில நாட்களாக நெஞ்சிடியைக் கொடுத்துகொண்டிருந்த தமிழ் அரசுக் கட்சி கடைசியாக அவற்றின் தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டது. அதாவது தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதில்லை என்றும் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள தமது கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் தேர்தலில் இருந்து விலகவேண்டும் என்றும் தமிழ் அரசுக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

நேற்றைய கூட்டத்தில் 30 பேர் கலந்துகொண்டிருந்தனர். 11 பேர் இருந்தாலே மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் செல்லுபடியாகும் என்று கட்சி யாப்பு சொல்கிறது. கூட்டத்தில் ☞ 2

## யாழ். - சென்னை இடையே மற்றொரு விமான சேவை

### நேற்று முதல் தொடக்கம்



சென்னைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே மற்றொரு விமான சேவை நிறுவனமும் நாளாந்தம் தனது சேவையைத் தொடங்கியுள்ளது. இண்டிகோ(Indigo) ஏயார்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய விமான சேவை நேற்று கொண்டாட்டத்துடன் ஆரம்பமாகியது. ☞ 2

## சஜித்துக்கு ஆதரவென்பது தமிழ் அரசின் கூட்டு முடிவு

### விளக்குகிறார் செயலாளர் சத்தியலிங்கம்

தமிழரசுக் கட்சி மத்திய குழுத் தீர்மனம் என்பது கட்சியின் கூட்டுத் தீர்மானமே என்று நேற்று விளக்கமளித்தார் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சி நேற்று முடிவெடுத்தது. வவுனியாவில் நேற்றுக் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு இந்த முடிவை எடுத்துப் பகிரங்கப்படுத்தியது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உடல்நலக் குறைவு காரணமாகக் கலந்து கொள்ளவில்லை.

இந்தநிலையில்தமிழ் அரசுக் கட்சியின் முடிவு என அறிவிக்கப்பட்ட விவரங்கள் உத்தியோக பூர்வமானவை இல்லை என்று கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார் என்று பரபரப்பான தகவல்கள் நேற்று மாலையில் பரவின. அ.்துதொடர்பில் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கத்திடம் வினவியபோது, ☞ 8



## நன்றி தெரிவித்த சஜித்

ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனக்கு ஆதரவளிக்க தீர்மானித்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்பிரேமதாச நன்றி தெரிவித்துள்ளார்.

'எக்ஸ்' வலைத்தளத்தில் தனதுநன்றியைப்பதிவுசெய்த அவர், சேர்ந்து பயணிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

''உங்கள் ஆதரவுக்கு நன்றி தமிழ் அரசுக் கட்சி. அனைவரும் வெற்றிபெறும் எதிர்காலத்தை உருவாக்குவோம். இன ☞ 8

## தடை உத்தரவு

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெறவிருந்த நிலையில் நகரில் ஆர்பாட்டங்கள் மேற்கொள்வதற்கு காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களை சேர்ந்தநால்வருக்குவவுனியா நீதிமன்றம் தடை விதித்தது.

பொலிஸார் நீதிமன் றில் தாக்கல்செய்த விண்ணப்பத்தின்படி குறித்த நான்கு பேருக்கும் ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத்தலைவிசிவாநந்தன் ஜெனிற்றா, தமிழர் ☞ 8

## சிலிண்டரை மறந்துபோனால் முதலீட்டு வலயம் கிடைக்காது

### அ்புரம் மக்களை மிரட்டிய ரணில்

சஜித்திற்கும் வழங்கும் வாக்குகள் அனுரவுக்கு வழங்கும் வாக்குகளுக்கு சமமானவை என்பதை ஐக்கிய தேசிய கட்சியினர் புரிந்துகொள்ளவேண்டும். அதனால் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது முதலீட்டு வலயமும் கிடைக்காது

தொம்பே பிரதேசத்தில் இன்று நடைபெற்ற ☞ 8

## ராணுவம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிராகரிப்பு

### ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவிப்பு

இலங்கை இராணுவத்தினர் மீது சுமத்தப்பட்டுள்ள அரசியல் காரணங்களுக்கான பொய் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்று சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சம்புத்த ஜயந்தி கேட்போர் கூடத்தில் நேற்று உரையாற்றுகையில்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் சுரேஷின் கட்சிக்குள்ளும் குழப்பம்



தமிழ்பொதுவேட்பாளர்விடயத்தில் தமிழ்அரசியல்கட்சிகள்சிலவற்றுக்குள் இருவேறு கருத்துக்கள் ஏற்பட்டுக் குழப்பங்கள் நிலவும் நிலையில் தற்போதுஈபிஆர்எல்எவ்கட்சிக்குள்ளும் அந்தக்குழப்பம்ஏற்பட்டுள்ளதாஎன்கிற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஏற்கனவே இந்தத் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைத் தான் ஆதரிக்கவில்லை என்று ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அறிவித்துள்ளார். தமிழ் அரசுக் கட்சிக்குள் ஒரு சிலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். எனினும்கட்சிஅவரைஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளரைத் தீவிரமாக ஆதரிக்கும் ஈபிஆர்எல்எவ் கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினர்வேட்பாளர் ☞ 2

## ‘13’ அமுலாக்கம் நாட்டின் சமாதானத்துக்கு அவசியம்

### அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக தெரிவிக்கும் ஒரேயொரு வேட்பாளர் நானே - சஜித்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுலாக்க வேண்டியது நாட்டின் எதிர்கால சமாதானத்துக்கும்அபிவிருத்திக்கும் அவசியமானதாகும். அது தேர்தலுக்கான வெறும் அரசியல் கோசம் அல்ல. அது தான் தாய் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றினால் எடுக்கப்படும் முடிவாகும்.

என்றுஐக்கியமக்கள்சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா தெரிவித்தார்.

யாழ். நகரத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து தனது அரசியல்-பொருளாதார நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தினார்சஜித்பிரேமதாச. அவர் அங்கு தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று ☞ 8

## இனி இது .....

தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கிழக்கில் இருந்து யோகேஸ்வரன், சிறீநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. இவர்களில் மாவையர் தனக்கு உடல்நலமில்லை என்று செயலாளருக்கு அறிவித்துவிட்டு யாழ்ப்பாணத்திலேயே நின்றுவிட்டார். சிறீதரன் லண்டனுக்குச் சென்றுவிட்டார். ஆனால், அவர் புறப்படுவதற்கு முன்னதாக இந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான தனது கருத்தை எழுத்துமூலமாகச் செயலாளரிடம் வழங்கிவிட்டே சென்றிருக்கின்றார். அந்தக் கடிதத்தில் அவர் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து கூறியிருந்த கருத்தும் நேற்றைய கூட்டத்தில் கவனத்தில் எடுக்கப்பட்டே முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சித் தலைவர் சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் சிறீநேசன், யோகேஸ்வரன், சட்டத்தரணி தவராசா ஆகியோரும் கலந்துகொள்ளாத நிலையில் இந்தக் கூட்டம் செல்லுபடியற்றது அதன் முடிவு ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்கிற வகையில் சமூக ஊடகங்களில் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. ஆனால், இவர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் மத்திய குழு உறுப்பினரே இல்லை. யோகேஸ்வரன், தனக்கு கூட்ட அழைப்பு விடுக்கப்படவில்லை என்று சொன்னதாக ஒரு ஒலிப்பதிவு உலாவியது. உண்மையில் அவர் ஊரில் இல்லை. தல யாத்திரை சென்றுவிட்டாராம். வீட்டில் இல்லாவிட்டால் அவருக்கு அழைப்பு கிடைத்திருக்காதுதான். அதற்காக அவர் போகும் இடமெல்லாமா அழைப்பை எடுத்துக்கொண்டு அலைவார்கள்? சிறீதரன் தனது கருத்தை எழுத்து மூலம் வழங்கி அந்தக் கூட்டத்தில் தனது பங்கேற்பை உறுதி செய்திருக்கிறார். சட்டத்தரணி தவராசா கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு இடையில் சென்றுவிட்டார். ஆக மொத்தத்தில் உப்புச்சப்பற்ற ஒன்றிரண்டு பேர் இல்லை என்பதைத் தவிர கூட்டம் முழுமையாகத்தான் நடந்திருக்கிறது.

அதில் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் நால்வர். சிறீதரனின் கடிதத்தையும் கருத்தில்கொண்டால் 5 பேர். 17 பேர் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். 8 பேர் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. அவர்களும் பொது வேட்பாளருக்கு ஆதரவு என்று ஒருவேளை, ஒரு வாதத்துக்கு அந்தத் தரப்பினர் வியாக்கியானப்படுத்தினாலும்கூட அவர்கள் தரப்பிற்குப் பெரும்பான்மைப் பலம் இல்லை. இந்த நிலையில் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை, சஜித்துக்கே ஆதரவு என்கிற விடயம் வாக்கெடுப்பு எதற்கும் விடப்படாமல் ஏகமனதாகவே எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க் கருத்துக்கள் வைத்தவர்களும்கூட, அனைவரும் இணைந்தே இந்த முடிவை எடுத்ததாக அறிவிக்கப்படவேண்டும் என்பதில் கருத்தொற்றுமையுடன் இருந்திருக்கிறார்கள்.

கூட்டத்தின் தொடக்கத்தில் சுமந்திரன் ஒரு அறிக்கையை முன்வைத்தார். அதில் முக்கிய வேட்பாளர்களான ரணில், சஜித், அனுர ஆகியோர் தமது தேர்தல் அறிக்கைகளில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டிருந்தார். இன்றைய கூட்டத்தில் விவாதிப்பதற்காக அந்த அறிக்கையைத் தயாரிக்கும்படி தலைவர் மாவை சேனாதிராசாதான் அவரைக் கேட்டிருந்தார். அந்த அறிக்கை கையில் கிடைத்ததுமே ஒருவர் அவசர அவசரமாக அதனைப் படம் எடுத்து ஊடகவியலாளர் ஒருவருக்கு அனுப்பி வைத்தார். அது சுமந்திரனின் கோரிக்கை என்கிற வகையில் அதனை அப்படியே இணையத் தளம் ஒன்று வெளியிட்டது. வாசித்துப் பார்த்திருந்தால் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கும்.

இந்தப் பின்னணியில்தான் நேற்று மாலையில், கட்சியின் முடிவை மாவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இது கட்சியின் முடிவேயல்ல ஒரு சிலரின் முடிவுதான் என்றும் அவர் தெரிவித்தார் என்று கதைகள் பரவத் தொடங்கின. நான் விசாரித்துப் பார்த்த வரையில் எந்த ஊடகத்திற்கு அவர் அப்படிச் சொன்னார் என்பது தெரியவரவே இல்லை. ஒரு ஊடகத்திற்கு அவர் சொன்னார் என்று பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தாலும் மாவை அப்படிச் சொன்னார் என்று எந்த ஊடகமும் நேரடியாகத் தகவல் வெளியிட்டு நான் பார்க்கவில்லை. அதேநேரம் கூட்டத்திற்கு தான் போகவில்லை, தனால் அதுபற்றிக் கருத்துச் சொல்ல முடியவில்லை, இந்தத் தீர்மானம் குறித்து தன்னிடம் மத்திய குழு கருத்து எதுவும் கேட்கவில்லை, மத்திய குழுவின் முடிவு தனக்கு ஆச்சரியமளிக்கின்றது என்றெல்லாம் அவர் சில ஊடகங்களுக்கு நேரடியாகக் கூறியிருப்பினும் இந்த முடிவு கட்சியின் முடிவல்ல ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு என்று அவர் தமக்குச் சொன்னார் என்று எந்தவொரு ஊடகமும் வெளியிட்டு நான் காணவில்லை.

தலைவரின் கருத்து இதுதான் என்று தகவல் பரவியதை அடுத்து தன்னை எடுத்துக் கேட்ட செய்தியாளர்களுக்கு செயலாளர் சத்தியலிங்கம் விவரங்களை விளக்கியுள்ளார். அது கட்சி முடிவுதான் என்று ஆணித்தரமாகச் சொல்லியுள்ளார். மாவையர்தான் பாவம். கூட்டத்திற்குப் போகாமல்விட்டால் முடிவு எடுக்கப்படாமல் இருக்கும் என்று அவர் எதிர்பார்த்திருப்பார் போலும், அதனால்தான் முடிவு எடுக்கப்பட்டது அவருக்கு ஆச்சரியத்தை தந்திருக்கிறது. மற்றொன்று அப்படி முடிவு எடுக்கப்படக்கூடாது என்றாலோ அல்லது தான் விரும்பும் முடிவை கட்சியை எடுக்க வைப்பதற்கோ ஏற்ற வழிமுறைகளையும் ஆலோசனைகள் அறிவுரைகளையும் அவர் முன்கூட்டியே வழங்கியிருக்கவேண்டும். அப்படியும் எதுவும் செய்யவில்லை. கடைசி நேரத்தில் உடல்நலமில்லை அதனால் கூட்டத்திற்கு வரவில்லை என்று மட்டும் மொட்டையாக அறிவித்தால், கூட்டத்திற்கு வந்தவர்கள் அவரை விட்டுவிட்டு கூட்டத்தை நடத்தத்தானே செய்வார்கள்.

மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய முடிவு சுமந்திரன் தரப்பினரின் முடிவு மட்டுமே என்று உருட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள் நேற்றே பிசுபிசுத்துப் போய்விட்டன. இன்றைக்கு என்ன புதிதாகக் கிளம்புகின்றது என்று பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சஜித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. கூட்டத்தின் முடிவில் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் செய்தியாளர்களிடம் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் பகிர்ந்துகொண்டார்.

இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேந்திரன் அவர்களை ஆதரிப்பதில்லை என தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன், எமது கட்சி உறுப்பினராகிய அரியநேந்திரன் ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, 2024 ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு கொடுப்பதாக தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. இதுவரை எமது கட்சி தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாகச் செயற்பட்டனர். தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்ப செயறட்படுவார்கள் - என்றார்.

(100)

## யாழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முதல் தினந்தோறும் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தினசரி விமான சேவை நடத்தப்படவுள்ளதாக இண்டிகோ (Indigo) ஏயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து நேற்றுத் தமது பயணத்தை ஆரம்பித்த 52 பயணிகளுடன் பிற்பகல் 3.07 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது இண்டிகோவின் முதல் விமானம்.

பயணிகளுக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இனியம் இசைக்க வரவேற்புத் தரப்பட்டது.

மங்கள விளக்கு ஏற்றல், வரவேற்பு நடனம், நினைவுப் பரிசில்கள் வழங்கல், கேக் வெட்டுதல் மற்றும் விருந்தினர்களின் உரை என்பன இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து விமானம் மீண்டும் சென்னைக்குத் திரும்பியது. யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட விமானத்தில் 74 பயணிகள் சென்னை நோக்கி பயணத்தை மேற்கொண்டனர்.

விமானத்தில் பயணித்த அனைத்து பயணிகளுக்கும் யாழ்ப்பாண உற்பத்திகளான பனம் பானம் உள்ளிட்ட யாழ்ப்பாண உற்பத்திகள் வழங்கப்பட்டன.

நேற்றைய நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் பிரதீபன், யாழ்.இந்திய துணை தூதுவர் சாய் முரளி, விமானப்படை அதிகாரிகள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பதவிநிலை அதிகாரிகள், பயணிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ‘13’ அமுலாக்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகத் தெரிவிக்கும் ஒரேயொரு வேட்பாளர் நான் மட்டுமே. ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றி நிச்சயமானது. அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி ஆளும்தரப்பைக் கைப்பற்றுவோம் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

அதேவேளை, 13ஆவது திருத்தத்தை அமுலாக்க வேண்டியது நாட்டின் எதிர்கால சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் அவசியமானதாகும். அது தேர்தலுக்கான வெறும் அரசியல் கோசம் அல்ல. அது தான் தாய் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றினால் எடுக்கப்படும் முடிவாகும்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நான் வலதுசாரித் துருவத்துக்கோ இடதுசாரித் துருவத்துக்கோ இழுத்துச் செல்லாமல் இடைப்பட்டபட்ட நடுவுப் பதையூடான கொள்கை முன்னெடுப்பாக மேற்கொள்வேன்.

ஜனநாயகமும் மானிட சமூகமும் மிக்க சமூகமயப்பட்ட சந்தைப் பொருளாதாரமே எனது பொருளாதாரக் கொள்கை. மக்களுக்கு சமத்துவமும் சமவாய்ப்பும் வழங்கும் மக்கள் நேயம் மிக்க, சூழல் பாதுகாப்பு மிக்க பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

நாட்டைச் சூறையாடிய நபர்களிடமிருந்து சொத்துக்களும் பணமும் மீட்டெடுக்கப்படும். அதற்கான சட்டமும் புதிய நாடாளுமன்றில் கொண்டுவரப்படும்.

தமிழர்களோ முஸ்லிம்களோ மலையகத் தமிழரோ, பறங்கி இனத்தவரோ, அனைவரும் சட்டத்தின் முன் சமமாக மதித்துப் பேணப்படுவர்.

கொரோனாவால் இறந்த முஸ்லிம் மக்களின் ஜனாசாக்கள் கோட்டா அரசாங்கத்தால் இஸ்லாமிய முறைமைக்கு மாறாக எரிக்கப்பட்டபோது, அதற்கெதிராக ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே வீதிக்கிறங்கிப் போராடியது.

மகிந்த ராஜபக்ச பிரதமர் கதிரையிலிருந்து இறங்கியபோது கோட்டாபய தன்னைப் பிரதமர் பதவியை ஏற்கும்படி கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்திருந்த ராஜபக்ச குடும்பத்திற்கு அடிமைப் பிரதமராகப் பணியாற்ற நான் விரும்பவில்லை. நான் மக்களிடம் புதிய ஆணையை தேர்தல் மூலம் பெற்று மக்களுக்கு சேவையாற்றவே விரும்பினேன்.

இந்தியா உலகில் இன்று ஒரு வல்லரசு. அது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் ஐந்து நாடுகளுடன் ஆறாவதாக இணையும் நிலையுள்ளது.

பூகோள ரீதியில் எமக்கருகில் அமைந்திருக்கும் அத்தகைய இந்திய வல்லரசு இலங்கையின் வரலாற்றோடும் பண்பாட்டுடனும் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

எனக்கும் இந்தியாவுக்கும் மிக நல்லுறவு உள்ளது என்றும் இந்திய உறவைப் பேணி வளர்க்கும் வெளிவிவகாரக் கொள்கை தனது ஆட்சியில் கடைப்பிடிக்கப்படும் எனவும் சஜித் தெரிவித்தார்.

இந்தியாவோ சீனாவோ எந்த வல்லரசுகளாயினும் இலங்கையின் தேசிய நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அடிப்படையிலேயே எனது ஆட்சியில் வெளியுறவுக் கொள்கை அமையும்.

ஏனது தந்தையார் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ஒரு நேர்மையான திடமான அரசியல் தலைவர். ஆயினும் அவர் இந்திய உறவு தொடர்பில் கடைப்பிடித்த கொள்கைகள் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்னிடம் உள்ளதாகவும் தான் ஒருபோதும் தனது தந்தையார் இந்திய உறவு தொடர்பில் கடைப்பிடித்த நிலைப்பாட்டில் நான் இல்லை. என்னிடம் புதிய அணுகுமுறைகளே உள்ளன என்றார் சஜித்.

## தமிழ் பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூவான் போபகேக்கு ஆதரவா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான ரூவான் போபகேயின் ஆதரவுக் கூட்டம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது. அதில் ஈபிஆர்எல்எவ் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், அரசியல் உயர் பீட உறுப்பினரும், தமிழ் பொது வேட்பாளர் கட்டமைப்பின் முக்கியஸ்தருமான அருந்தவராஜா (மேழிக்குமரன்) கலந்துகொண்டதை அடுத்து இந்தச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஈபிஆர்எல்எப் கட்சி தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் ரூவான் போபகேக்கு ஆதரவாக நடந்த கூட்டத்தில் மேழிக்குமரன் பகிரங்கமாகக் கலந்துகொண்டமை ஈபிஆர்எல்எவ் கட்சிக்குள்ளும் இந்த விடயத்தில் குழப்பம் நிலவுவதைக் காட்டுகின்றது என்று கூறப்படுகின்றது.

மேழிக்குமரனே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கும் பொதுக் கட்டமைப்பில் வவுனியா மாவட்ட நிதிக் கையாளுகைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு இருந்தார்.

(100)



காலைக்கதிர் Kalaikkathir

# என்னைத் தோற்கடித்தாலும் ரணிலை தோற்கடிக்காதீர்

## வஜிர அபேவர்தன தெரிவிப்பு



வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்றிட்டத்தை மாற்றினால் முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன வலியுறுத்தினார்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் 15 லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வஜிர அபேவர்தன இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன -

'இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிக முக்கியமான தேர்தலாகும். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

பொருளாதார பரிமாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. யார் கொள்கையை முன்வைத்தாலும், அது இந்த சட்டங்களின்படியே செய்யப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கும் நாடுகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம். இந்த சட்டங்களின்படி நாங்கள் செயல்படுவோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

எனவே வீழ்ந்து கிடந்த இந்த நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த நிபந்தனைகள் திருத்தப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 15 லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பைப் பயன்படுத்தும் போது சரியான முடிவை எடுக்க வேண்டும்.

சிலர் திருடர்களைப் பிடிக்க அதிகாரம் கேட்கிறார்கள். ஆனால் இனிமேல் அவன் திருடன் இவன் திருடன் என கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஊழலுக்கு எதிரான சட்டம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் முறையிட மட்டுமே வேண்டும். திருடர்களைப் பிடிப்பதாகக் கூறும் எதிர்க்கட்சித் தலைவர்களின் பெயர்கள் கூட அமைச்சுக்களின் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்பதற்காக உழைக்கும்போது ஜனாதிபதி அரச ஊழியர்களை மறக்கவில்லை. அரச இயந்திரத்தின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி நன்கு உணர்ந்துள்ளார்.

அதனால்தான் கடந்த காலத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. மேலும், 2025 முதல் மாதாந்தம் 25,000 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி, அரசாங்க ஊழியரின் ஆரம்ப சம்பளம் 24 வீதம் அதிகரிக்கப்படவுள்ளது. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளமாக 55,000 ரூபா வழங்கும் இலக்கை அடைய இருப்பதாக ஜனாதிபதியின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினரும் பல்வேறு முன்மொழிவுகளையும் வாக்குறுதிகளையும் உள்ளடக்கியிருந்தாலும், அந்த வாக்குறுதிகள் யதார்த்தமாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

எனவே, அரசு இயந்திரம் கவனமாக செயற்படாவிட்டால், இந்த நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். 2019இல் அரசு ஊழியர்கள் அந்தத் தவறை செய்தார்கள். மீண்டும் அந்தத் தவறை அவர்கள் செய்யக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமே தேசிய கொள்கை கட்டமைப்புக்குள் கொள்கை பிரகடனத்தை முன்வைத்துள்ளார்.

எனவே, அரசு ஊழியர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். 38 வேட்பாளர்களில் சர்வதேச தொடர்புகளைக் கொண்ட, அனுபவம் உள்ள, நாட்டைப் பாதுகாக்கக்கூடிய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவுக்கு இணையான தலைவர் யாரும் இல்லை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் என்னைத் தோற்கடித்தாலும் பரவாயில்லை. ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்காதீர்கள். அவரைத் தோற்கடித்தால் முழு நாடும் அழிந்துவிடும். சிலிண்டருக்காக நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். - என்றார். (05)

# வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை தபால் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை

ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை தபால் மூலம் மக்களுக்கு விநியோகிக்க முடியும் எனவும் அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள், பிரசார அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை தபாலினூடாக மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கலாம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியுள்ளார்.

(05)

# லொறி மோதி பாதசாரி சாவு

வரக்காப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி வீதியில் அம்பேபுஸ்ஸ சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பாதசாரி வரக்காப்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ரணிலுக்கு ஆதரவாக; குதிரைகளில் பரப்புரை

கொழும்பில் இருந்து இரண்டு உயர் ரக வெள்ளைக்குதிரைகள் தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரதான வீதிகளில் உலா வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக இந்த குதிரைகள் தினமும் வீதிகளில் உலாவுகின்றன.

ரணில் விக்ரமசிங்கவின் பிரசார கூட்டங்கள் இடம்பெறுகின்ற இடங்களை மையப்படுத்தி இந்த இரு குதிரைகளும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதுடன், வித்தியாசமான முறையில் மக்களிடம் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக பிரசாரம் செய்வது போல் வீதிகளில் நடமாடுகின்றன.

சம்மாந்துறை பகுதியில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து நடைபெறவுள்ள கூட்டத்துக்கு முன்னர், கூட்ட அழைப்புக்காக குதிரைகளை ஏற்பாட்டாளர்கள் காட்சிப்பொருளாக பயன்படுத்தி மக்களை கவர்ந்திழுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வின் தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை என்பதுடன் இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை அவர் ஆதரிப்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# 15 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் ஜனாதிபதி தேர்தலுக்கு தயார்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது நாடெங்கும் 15 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவிடம் தற்போது சுமார் 25 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தேர்தலுக்கான வாக்குச் சீட்டு 26 அங்குல நீளம் கொண்டதாகவும் இது கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அச்சடிக்கப்பட்ட வாக்குச் சீட்டின் நீளத்துக்கு இணையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத மதுபானத்துடன் கம்பஹாவில் இளைஞன் கைது

கம்பஹா, பல்லேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுராகொட பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன், இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பல்லேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேவெல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுராகொட பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 101 லீற்றர் சட்டவிரோத மதுபானம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.(05)

# இறைவரி திணைக்கள அதிகாரிகள் என்ற போர்வையில் பண மோசடி

## இருவர் கைது

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் என கூறி அளுத்கம மற்றும் தர்கா நகர் ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக கூறப்படும் பெண் உட்பட இருவர் அளுத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிட்டம்புவ, கலகெடிஹேன பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடைய ஆணும், பொத்துஹெர பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபர்கள் இருவரும் கடந்த 29ஆம் திகதி தர்கா நகரத்தில் உள்ள நகை கடை ஒன்றுக்கு சென்று தங்களை இறைவரி திணைக்கள அதிகாரிகள் என அடையாளப்படுத்தி குறித்த நகைக்கடையின் வருமான வரி ஆவணங்கள் மற்றும் வணிகப் பதிவை சரிபார்த்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த நகைக்கடையில் இருந்த ஊழியர்கள் இந்த இருவர் மீதும் சந்தேகம் கொண்ட நிலையில் அவர்களை பிடித்து அளுத்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்த அடையாள அட்டை போலியானது என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிந்திப்பார்களா?

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பினரால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டபோது, அதன் நோக்கமாக ஓங்கி முழங்கப்பட்டது தமிழர்களின் ஒற்றுமை. தமிழ் மக்களை தமிழ் தேசமாகக் கட்டியெழுப்புதல் ஆகியனதான். அதாவது, தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை ஒருங்கிணைத்து அதற்கு ஆதரவான பொது அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களையும் மக்களையும் ஒரே புள்ளியில் இணைத்து மீண்டுத் தமிழ்த் தேசியத்தை வீறுகொண்டு எழச் செய்வதுதான் இதன் நோக்கம் என்று சொல்லப்பட்டது.

தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதியாகப் போவதில்லை என்பது தெரிந்தாலும் இந்தத் தேர்தலைஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு தமிழ் தேசத்தின் ஒருங்கிணைபே, தமிழர்களின் ஒற்றுமையே தமது நோக்கம் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் இப்போதும் மேடைகளில் கூறிவருகின்றார். ஆனால், தமிழ் அரசுக் கட்சி நேற்று எடுத்திருக்கும் முடிவுடன் தமிழ் மக்களின் வாக்குகள் ஏற்கனவே இருந்ததைவிட இன்னும் பல மடங்கு சிதறடிக்கப்படப் போகின்றது என்பது தெளிவாகின்றது.

தமிழரின்ஒற்றுமை, தமிழ்த்தேசஒருங்கிணைப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு முயற்சி அதன் அடிப்படையான கொள்கைக்கு முற்றிலும் முரணான விளைவை களத்தில் ஏற்படுத்தி வருகின்றது. பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் என்று சொல்லப்படுபவை பிளவுபட்டு நிற்பதன் காரணத்தால் தமிழர்களின் பேரம் பேசும் சக்தி மற்றும் தமிழர்களின் எதிர்ப்பு சக்தி இரண்டுமே பலவீனப்பட்டு நிற்கப் போகின்றது. பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு முன்பாகத் தெளிவாகவும்சிறப்பாகவும்ஒருஒருங்கிணைப்பைச் செய்யத் தவறியதன் காரணத்தால் குறைந்தபட்ச கொள்கை இணக்கத்தைக்கூட அவர்களால் எட்டமுடியவில்லை. அதன்விளைவுதமிழ்மக்களை மேலும் பலவாறாகத் துண்டாடியிருக்கின்றது.

இப்போது ரணிலுக்கு, சஜித்துக்கு, பொது வேட்பாளருக்கு என்றவாறாக தமிழர்களின் ஒற்றுமை சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்கள் ஒன்றுபட்டுப் பலப்படவேண்டியதொரு தருணத்தில் இந்த உடைவு, பிளவு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும்பாதிப்பைபொதுக்கட்டமைப்பினர் மீள்பரிசீலனை செய்வார்களா? தமது அடிப்படைக் கொள்கைக்கு எதிரான விளைவை நோக்கி தமது முயற்சி நகர்ந்துசெல்வதைப் புரிந்துகொண்டு செயற்படுவார்களா? அவர்களின் நோக்கமும் தேவையும் தமிழர்களின் ஒற்றுமைதான் என்றால் அவர்கள் சிந்திக்கவேண்டிய அவசியமான தருணம் இது.

# உக்ரைனில் ரஷ்யா பின்வாங்கினால் புட்டின் படுகொலை செய்யப்படுவார் ?





**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

'புட்டினின் ஆதரவாளர் என விமர்சிக்கப்படுகிறேன், அந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது. உக்ரைனில் இருந்து பின்வாங்கினால், புட்டின் கிரெம்ளினிலேயே படுகொலை செய்யப்படுவார்' என எலான் மஸ்க் கூறியமை பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

எலான் மஸ்க் நிறுவிய டெஸ்லா மோட்டார்ஸ் (Tesla Motors) தயாரித்த மின்சார மகிழுந்துகள் (Car) உலகம் எங்கும் பிரபலமாய் விற்பனை ஆகிவருகின்றன. அமெரிக்க மகிழுந்துகள் தயாரிப்பில் ஜெனரல் மோட்டார்ஸ் குழுமத்தையும் விஞ்சிவிட்டது என 2017 ஏப்ரலில் அறிவிக்கப்பட்டது.

### புட்டினை படுகொலை செய்ய சதி ?

அறிவியல் துறையில் முன்னோடியாக இருக்கும் எலான் மஸ்க், தற்போது சர்வதேச அரசியல் வெளியிலும் முக்கியமானவராக கருதப்படுகிறார்.

உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகள் பின்வாங்கினால் அதிபர் புட்டினை படுகொலை செய்துவிடுவார்கள் என உலகின் முன்னணி பணக் காரர் எலான் மஸ்க் (Elan mask) அண்மையில் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புட்டினை படுகொலை செய்ய சதி என கதிகலங்க வைத்த எலான் மஸ்க் தெரிவித்த கருத்து

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க குடியரசு கட்சி செனட் உறுப்பினர்கள் உடனான கலந்துரையாடலின்போது, டெஸ்லா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் இப்படி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு மேலும் உதவிகளை வழங்கும் நோக்கில் அமெரிக்க செனட் சபையில் மசோதா கொண்டு வரப்பட்டது. உக்ரைனுக்கு 120 பில்லியன் டாலர்களும் இஸ்ரேல், தைவான், காசாவுக்கு 35 பில்லியன் டாலர்களும் வழங்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்டது.

இல்லை. உக்ரைன் மசோதா பற்றி தெரிந்து கொள்ள அமெரிக்கர்கள் தங்களின் மக்கள் பிரதிநிதிகளை தொடர்புகொள்வார்கள் என நம்புகிறேன்.

இந்தச் செலவு உக்ரைனுக்கு உதவாது. போரை நீட்டிக்க உக்ரைனுக்கு உதவாது. போரில் வெல்ல உக்ரைனுக்கு திறன் இருக்கிறதா என தெரியவில்லை. சண்டையை முடிவுக்கு கொண்டுவர புட்டினுக்கு அழுத்தம் தரப்படுகிறது. அவர் போரில் இருந்து பின்வாங்கினால், அவர் கிரெம்ளினிலேயே படுகொலை செய்யப்படுவார்.

சில சமயங்களில் புட்டினின் ஆதரவாளர் என விமர்சிக்கப்படுகிறேன். ஆனால், அந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது. போரில் ரஷ்யாவை மட்டுப்படுத்த மற்றவற்றை காட்டிலும் எனது நிறுவனங்கள் நிறையவற்றை செய்துள்ளது என்றார் எலான் மஸ்க்.

ஸ்பெஸ்எக்ஸ்நிறுவனம்போரால்பாதிக்கப்பட்டுள்ள உக்ரைக்கு ஸ்டார்லிங்க் இணைய சேவை வழங்கி வருகிறது. போரை தொடர்ந்து, உக்ரைனின் தொலைத்தொடர்பில் எலான் மஸ்கின் ஸ்பெஸ்எக்ஸ் நிறுவனம் பெரும் பங்காற்றி வருகிறது. இருப்பினும், போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனுக்கு நிதி உதவி வழங்க எலான் மஸ்க் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

எலான் மஸ்க் வணிக நோக்கில் விண்வெளியில் சுற்றுலாப் பயணம் செய்ய விண்கலத்தை உருவாக்கி மனிதர்களை அனுப்புவதே ஸ்பேஸ் எக்சின் முதன்மையான திட்டம் ஆகும். மேலும் செவ்வாய்க் கோளுக்கு மனிதர்களைக் குடியேற்ற வேண்டும். அது 2024 ஆம் ஆண்டில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார் எலான் மஸ்க்.

2013 இல் ஹைபர்லூப் என்னும் புதிய கருத்தை முன்வைத்து அறிவித்தார். அந்தத் திட்டத்தின்படி பெரு நகரங்களிடையே மிக விரைவில் பயணம் செய்யக்கூடிய நோக்கத்தில் குறைந்த அழுத்தக் குழாய்கள் வழியாக ஒரு மணி நேரத்தில் 700 மைல்கள் விரைந்து செல்ல முடியும். வானுர்தி, தொடர்வண்டி ஆகிய ஊர்திகளை விட வேகமாகச் செல்ல முடியும். இந்த் திட்டம் நிறைவேற 10




### பரபரப்பை கிளப்பிய எலான் மஸ்க்:

உக்ரைன் வெற்றியை எதிர் பார்ப்பவர்கள் கற்பனை உலகில் வாழ்கின்றனர் என ஜான்சன் தெரிவித்தார். இந்த கருத்தை ஒப்புக்கொண்ட எலான் மஸ்க், உக்ரைனுக்கு ஏதிரான போரில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தோற்பதற்கு வாய்ப்பே

ஆண்டுகளுக்குமேல்ஆகும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் எலான் மஸ்க் 'ஓபன் புணூ' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தில் இவர் பொறுப்பேற்றுச் செயல்பட்டார். இது செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக் குறித்து ஆய்வு செய்கிறது. மேலும் நியுராலிங்க் என்ற அமைப்பில், மனிதர்களின்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர்
Kalaikkathir

# சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்களுடன் நபரொருவர் கைது





திருகோணமலை, நிலாவெளி கடற் கரை பகுதியில் சட்ட விரோதமாக பிடிக் கப்பட்ட மீன்களை விற்பனை செய்ய முயன்ற நபரொருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.


கிழக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படை வீரர்கள் மேற்கொண்ட ரோந்துப் நடவடிக்கையின் போது, சட்டவி ரோதமாக பிடிக்கப்பட்ட மீன்களை வைத்திருந்த நபரொருவரே இவ்வாறு வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இதன்போது, 72 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 1865 கிலோ கிராம் சட்டவிரோதமாக பிடிபட்ட மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் 39 வயதுடைய நிலாவெளி பகுதியில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மீன்களுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பல்லேவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# உக்ரைனில் ரஷ்யா பின்வாங்கினால்...

4ம் பக்க தொடர்ச்சி..........



மூளையில்கருவியைப்பொருத்திமென்பொருளுடன் இணைக்கும் முயற்சியை மேற்கொள்வதில் எலான் மஸ்க் முனைப்பாக இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**எலான் மஸ்க்கை பாராட்டிய புட்டின்:**

அண்மையில் ரஷ்ய அதிபர் புட்டினிடம், பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளரான டக்கர் கார்ல்சன் நடத்திய ஒரு நேர்காணலில் பல்வேறு கேள்விகளைக் கேட்டார்.

ஏஐ மற்றும் நியூராலிங்க் பற்றி கேள்வி கேட்டபோது, மனிதகுலம் தற்போது பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. மரபணு ஆராய்ச்சியாளர்களால் தற்போது ஒரு மனிதநேயமற்ற மனிதன், ஒரு விளையாட்டு வீரர், விஞ்ஞானி மற்றும் ராணுவ மனிதன் என பல்வேறு நபர்களை உருவாக்க முடியும் என்றார் புட்டின்.

அதன் பிறகு 'சிப்'-ஐ மனிதனின் மூளையில் பொருத்துவது தொடர்பாக புட்டினிடம் கேள்வி எழுப்பப்பட்டது. எலான் மஸ்கை நிறுத்துவது அவ்வளவு சுலபம் அல்ல. அவர் எதை அடைய வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறார். அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அவரின் கண்டுபிடிப்புகள், சிந்தனைகள் பற்றி நாம் அறிவு சார்ந்த கேள்விகளை தொடர்ந்து எழுப்பினால் தான், அவருடைய கண்டுபிடிப்புகள் இன்னும் மேம்பட்டதாக அமையும். மூளையில் சிப் வைக்கும் இந்த ஆய்வு முழுமை பெற்ற பிறகே அதனை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றார். எலன் மஸ்க் இந்த புட்டினின் நேர்காணலை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணிலை ஆதரித்து திருமலையில் கிளை அலுவலகம்






கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து திருகோணமலை அநுராதபுர சந்தியில் கிளைக் காரியாலயம் சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரளவின் பங்கேற்புடன் இந்த காரியாலயம் திறக்கப்பட்டது.

இந்த அலுவலகத் திறப்பு நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சன்திப் சமரசிங்க, இம்முறை ஜனாதிபதி தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்துக்குவாக்களித்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரவளிப்பதாகதிருகோணமலைமாவட்டஹோட்டல் அமைப்பின் தலைவர் குமார் ஜெயக்குமாரன் இதன்போது தெரிவித்தார்.(05)



# கற்பிட்டியில் பீடி இலை பொதிகள் படகுகளுடன் கைப்பற்றப்பட்டன

புத்தளம், கற்பிட்டி, குடாவ கடற்கரைபகுதியில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலை பொதிகள் மற்றும்படகுகள்கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1,042 கிலோகிராம் பீடி இலைகள் (33 பொதிகள்) மற்றும் 02 படகுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலை பொதிகள் மற்றும் படகுகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மேல் மாகாண கலால் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(05)

# எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் தொடர்பில் வெளியான தகவல்

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் போட்டியிட இதுவரை (26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை) எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ வைப்புப் பணம் செலுத்தவில்லை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எல்பிட்டிய பிரதேச சபைக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 26ஆம் திகதி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு அருகில் ‘கோகுலம் மையம்’ இந்து கற்றல் நிலையம்

## நிர்மாணிக்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவிப்பு

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு அருகில் ’கோகுலம் மையம்’ இந்து கற்றல் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் தெரிவித்தார்.

திருகோணமலையில் சனிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கோனேஸ்வரம் என்ற பழைமையான ஆலயம், தெற்கு கைலாசமாக இந்துக்களின் புனிதப் பராமரிப்பில் இருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த ஆலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தாம் உழைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள சிவில் பாதுகாப்புப் படையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திருகோணமலை துறைமுகத்தை எந்த அரசாங்கமும் அபிவிருத்தி செய்யவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்திய அரசாங்கத்துடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

திருகோணமலையை அபிவிருத்தி செய்ய ஆர். சம்பந்தன் தொடர்ந்து தன்னிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தார் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அப்போது அவருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதாகத் தெரிவித்தார்.(05)



# நல்லூர் தேர்த்திருவிழா முடிவடையும் வரை யாழ். குடாநாட்டில் அரசியல் செய்வதில்லை

## நாமல் தெரிவிப்பு

நல்லூர் தேர்திருவிழா முடிவடையும் வரை யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்த்திருவிழா முடிவடையும் வரை தனது அரசியல் நடவடிக்கைகளிற்காக தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் தேர்திருவிழா முடிவடையும் வரை நான் யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என தீர்மானித்துள்ளேன், யாழ்ப்பாணத்தினதும் நல்லூர் ஆலயத்தினதும் கலாசார முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டே நான் இவ்வாறு தீர்மானித்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

புனிதமான தருணங்களில் பாரம்பரியங்களை பேணுவது அவசியம் என நான் கருதுகின்றேன் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(05)

# டெங்கு அபாய வலயங்களாக ஐந்து மாவட்டங்கள் அறிவிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 05 மாவட்டங்களின் 29 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாயமிக்க வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா , களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமிக்க மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நாட்டில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 36,552 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 15,120 ஆகும்.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டுள்ள வெளிநாட்டு சிகரட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வர்த்தகரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 02.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான 20 ஆயிரம் வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 100 காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர்கோபாலகிருஸ்ணன்ராஜ்குமார், அந்த சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெய வனிதா, மற்றும் காணாமல்போன அமைப்பைச் சேர்ந்த சண்முகநான் சறோஜாதேவி ஆகியோருக்கு எதிராகவே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நால்வரும் வவுனியா நகரில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் 01.09.2024 காலை 6.00 மணி தொடக்கம் பிற்பகல்6.00மணிவரையானகாலப்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் என்பனவற்றைமேற்கொள்வதற்குகுற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 106(01) இன் கீழ் தடை விதிக்கப்படுவதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(100)

## சிலிண்டரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயலும் ஸ்ரீலங்கா வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். கொட்டும் மழைக்கு மத்தியில் இந்தக் கூட்டம் நடந்தது. அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இரு வருடங்களுக்கு முன்பு வரிசையில் நின்றதாலேயே இன்று பலர் இங்கு நிற்கிறீர்கள். அன்று இறப்பதற்கும் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது. பிரதமர் விலகினால் எதிர்கட்சித்தலைவருக்கு இடமளிக்கவேண்டும் என்று சுமந்திரன் எம்.பி கூறினார். ஆனால் அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள பயமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். சரத் பொன்சேகாவும் மறுத்தார். அனுரகுமார கேட்கவே இல்லை. ஆனால் நாட்டின் நிலை மோசமாக உள்ளதை அறிந்தே நான் ஏற்றுக்கொண்டேன். இப்போது என்னோடு இருப்பவர்கள் எனக்கு ஆதரவளித்ததால் நான் ஏற்றுக்கொண்டேன்.

நாட்டை பொறுப்பேற்க விரும்பாத சஜித்தும் அனுரவும் நான் பதவியேற்பதையும் விரும்பவில்லை. நாடாளுமன்றத்தை கையகப்படுத்தவும் ஒரு குழு வந்தது நாடாளுமன்றத்திலிருந்த தலைவர்கள் அஞ்சி ஓடினர்.

முடக்க வந்தவர்களை இராணுவத்தை கொண்டு தடுத்தோம். வீட்டைக் கட்டுவதை போல படிப்படியாக நாட்டைக் கட்டியெழுப்புவேன்.

ரூபாய் வலுவடைந்ததால் பொருட்களின் விலைகுறைந்தது. மொத்ததேசியஉற்பத்தியை அதிகரித்துவாழ்க்கைச்சுமையைகுறைப்பேன். அனுரவும்சஜித்தும் வரியை குறைப்பதாக சொல்கிறார்கள்.

கோட்டாய ராஜபக்ஷ செய்ததையே அவர்களும் செய்யப் பார்க்கின்றனர். இளையோருக்கு நான்கு வருடங்கள் தொழில் கிடைக்கவில்லை. அரச, தனியார் துறைகளில் அவர்களுக்கு பயிற்சியுடன் வேலை வழங்குவோம்.

நவீனவிவசாயத்திற்குள்உள்வாங்குவோம். ஏற்றுமதியை ஊக்குவிப்போம். சுற்றுலாவை ஊக்குவிப்போம். புதிய முதலீடுகளை கொண்டு வர தனியொரு வேலைத்திட்டம் உள்ளது.

கேரகலவில் முதலீட்டு வலயத்தின் 3 ஆவது வலயம் அமைக்கப்படும். அதனால் பெருமளவானவர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும். கம்பஹாவை நானே அபிவிருத்தி செய்தேன்.

சீனாவிற்கு தூரியான் ஏற்றுமதி செய்ய தூரியான்செய்கைகளைபுதிதாகஅமைப்போம். அதேபோல் சஜித்திற்கும் வழங்கும் வாக்குகள் அனுரவுக்கு வழங்கும் வாக்குகளுக்கு சமமானவை என்பதை ஐக்கிய தேசிய கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும்.

அதனால் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்குவாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது முதலீட்டு வலயமும் கிடைக்காது என்றார்.

## நன்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடு இல்லாத எதிர்காலம் மற்றும் ஒற்றுமை,வலிமை மற்றும் பகிரப்பட்ட நோக்கத்தின்அடிப்படையில்கட்டமைக்கப்பட்ட எதிர்காலம், அனைவருக்கும் வலிமையான எதிர்காலம்" என்று தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தபோது யாழ்ப்பாணத்தில் இருக்கக் கிடைத்தது பாக்கியம் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

தனது 'எக்ஸ்' வலைத் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், பன்முக கலாச்சார ஒற்றுமை மற்றும் வேற்றுமையின் ஒரே வேட்பாளரான சஜித்தின் நிலைப்பாட்டை இது (தமிழ் அரசின் ஆதரவு) வலுப்படுத்துகிறது.

எல்லோரையும்உள்ளடக்கிய,இணையற்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை உருவாக்கும் வகையில் எதிர்கால ஆளும் தரப்பு அனைத்து இலங்கையர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் எனவும் அப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சஜித்துக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய செயற்குழுவின் தீர்மானம் ஒரு கூட்டுத் தீர்மானமே என்று தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவித்ததாவது:

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா கலந்துகொள்ளவில்லை. மத்திய குழுத் தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். இன்றைய (நேற்று) மத்திய குழுவில் 30 பேர் கலந்து கொண்டார்கள். தலைவர் மாவை சேனாதிராசாஉட்படமத்தியகுழுஉறுப்பினர்கள் அனைவருக்கும் கூட்டம் தொடர்பான அறிவித்தல், அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. உடல்நலக் குறைவு காரணமாக தலைவர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று எனக்கு அறியத்தந்திருந்தார்.

இதனால் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இந்த மத்திய குழுவின் தீர்மானம் தான் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்பது. அதனையே பகிரங்கமாக அறிவித்தோம். செப்டெம்பர் 4 தபால் மூல வாக்களிப்பு. அதனால்யாரை ஆதரிப்பது என்கிறதீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்சியின் மத்தியகுழுத் தீர்மானம் தொடர்பில் தலைவருடன் ஏற்கனவே நான் கதைத்துள்ளேன். கட்சியின் மூத்த துணைத் தலைலவர் சிவஞானம் யாழ்ப்பாணம் சென்று சேர்ந்ததும், தலைவரை நேரில் சந்தித்து மத்திய குழுவின் முடிவு தொடர்பில் அவருக்கு விளக்குவார் - என்றார். (100)




# வவுனியாவில் தனிநாயகம் அடிகளாரின் 44 ஆவது நினைவு தினம் அனுஸ்டிப்பு





தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 44 ஆவது நினைவு தினம் வவுனியாவின் நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலை அருகே இடம்பெற்று இருந்தது.

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன், தனிநாயகம் அடிகளார் தொடர்பான சிறப்புரையும் இடம்பெற்றிருந்தது.





இந்நிகழ்வில்வவுனியாநகரசபைசெயலாளர்அ.பாலகிருபன், முன்னாள் நகர சபை உறுப்பினர் சேனாதிராசா, தமிழ்மணி அகளங்கன், ஓட்டோ உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# பாதாள உலக கும்பலைச் சேர்ந்த உதவியாளர் உட்பட இருவர் கைது

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான 'கரந்தெனிய சுந்தா'வின் உதவியாளர் உட்பட இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வதுரவில சந்தியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 01 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

(05)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஓ வகை குருதி தட்டுப்பாடு நிலவுவதாகமாவட்டவைத்தியாலையின் இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் இரத்தவங்கியில் ஓ பொசிற்றிவ் மற்றும் ஓ நெக்கரிவ் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. எனவே குருதி கொடை வழங்கும் அன்பர்கள் மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இரத்த தானம் செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, மேற்படி அவசர அவசிய நிலைமையைக் கருத்தில் கொண்டு குருதி கொடை அளிக்குமாறு பொது மக்களிடம் கிளிநொச்சி மாவட்ட இரத்த வங்கி கோரியுள்ளது.

(05)

# மின் உபகரண விற்பனை நிலையத்தில் 27 லட்சம் ரூபாய் பொருள்கள் திருட்டு

## மூவர் கைது

களுத்துறை, பேருவளை நகரத்தில் உள்ள மின் உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிலிருந்து 27 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை, பாணந்துறை மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து, குறித்தவிற்பனைநிலையத்திலிருந்துதிருடப்பட்டதாகக் கூறப்படும் 18 கையடக்கத் தொலைபேசிகள், 02 மடிக்கணினிகள் மற்றும் 03 தொலைக்காட்சி பெட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள்மூவரும்களுத்துறைநீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகபொலிஸார்தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளைபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# மீதியைக் கேட்ட பயணி மீது பஸ் நடத்துநர் தாக்குதல்

பத்தரமுல்லை - தெஹிவளை இலக்கம்163பஸ்ஸின்நடத்துநர்பயணி ஒருவரை தாக்கியுள்ளதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது- 163 பஸ்ஸில் பயணித்த பயணி நடத்துநரிடம் பஸ் கட்டணத்தை செலுத்தியுள்ளநிலையில்மீதிபணத்தைத் தருமாறு கேட்டுள்ளார்.

இதனால் இருவருக்கும் இடையில் ஏற்பட்டவாய்தகராறு எல்லை மீறியதில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து,சந்தேகநபரானபஸ் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பயணி கொழும்பு தெற்கு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை சாவு

## ஒருவர் கைது

மாத்தளை, யடவத்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தலுபோதவத்தை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் மின்சாரம் தாக்கி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

25 முதல் 30 வயது மதிக்கத்தக்க யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மிருகங்களை வேட்டையாடுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பிகளில் சிக்கியே இந்த யானை உயிரிழந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த காணியின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்எனப்பொலிஸார்தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெலபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# தவறான முடிவெடுத்து சிப்பாய் உயிர் மாய்ப்பு

பத்தரமுல்ல அக்குரேகொட இராணுவத் தலைமையகத்தில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என தலங்கமை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர்இராணுவத்தலைமையகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போது தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2024இல் வெளியிடப்பெற்றது